ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2491/56 - 2026 ජූනි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.04

2491/56 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: BD/HE/LND/5/71.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 44-3/8/2018/S/308.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹாலி எல பிரதேச செயலாளர் பிரிவின் போகொட வலயத்தில் 77பீ, ஜங்குல்ல கிராம அலுவலர் பிரிவில் வேகம கிராம நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் B/HLE/2023/1374 கொண்ட அ.க.பி. 710359, 03 ஆம் இலக்க மண்டல பத்திரத்தில் 1ஆம் இலக்க துண்டில் உள்ள 01 ஆம் இலக்க காணி வரையான காட்டப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 0.0253 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

வடக்கு: அ.க.பி. 382 இன் துண்டு இலக்கம் 454 (பகுதி); கிழக்கு: அ.க.பி. 382 இன் துண்டு இலக்கம் 454 (பகுதி) மற்றும் 460; தெற்கு: அ.க.பி. 382 இன் துண்டு இலக்கம் 460 மற்றும் 454 (பகுதி); மேற்கு: அ.க.பி. 382 இன் துண்டு இலக்கம் 454 (பகுதி).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி மு.ப. 9.00


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மணிக்கு ஹாலிஎல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப் பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டப். எம். சீ. வீரசிங்க,
பிரதேச செயலாளர் (பதில் கடமை),
ஹாலிஎல.

பிரதேச செயலகம்,
ஹாலிஎல,
2026, யூலை 15.

EOG 06 - 0040